## சுருக்கம்

பள்ளிக் கல்வி – ஆசிரியர் தேர்வு வாரியத்தால் நேரடி நியமனம் மூலம் நிரப்பப்படும் வட்டாரக் கல்வி அலுவலர் பணியிடத்திற்கு போட்டித் தேர்வுக்கென புதிய பாடத்திட்டம் நிர்ணயம் செய்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

## பள்ளிக் கல்வி(தொ.க.1(1))த் துறை

அரசாணை (நிலை) எண்.33

நாள் 19.02.2019
திருவள்ளுவர் ஆண்டு–2050
விளம்பி வருடம், மாசி 7,
படிக்கப்பட்டவை:–

1. அரசாணை (நிலை) எண்.182, பள்ளிக் கல்வித் (ஜி) துறை, நாள் 25.07.2007.
2. அரசாணை (நிலை) எண்.27, பள்ளிக் கல்வித் (ஜி) துறை, நாள் 08.02.2008.
3. அரசாணை (நிலை) எண்.58, பள்ளிக் கல்வித் (க்யூ) துறை, நாள் 16.02.2009.
4. அரசாணை (நிலை) எண்.41, பள்ளிக் கல்வித் (தொ.க.1(1)) துறை, நாள் 20.02.2016.
5. அரசாணை (நிலை) எண்.16, பள்ளிக் கல்வித் (ப.க.1) துறை, நாள் 06.02.2018.
6. அரசு கடிதம் எண்.11150/பள்ளிக் கல்வி (தொ.க.1(1))/2018, நாள் 02.08.2018.
7. தொடக்கக்கல்வி இயக்குநரின் கடித ந.க.எண்.20173/ஐ1/2015, நாள் 21.12.2018.

* * * * *

**ஆணை:–**

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், உதவித் தொடக்கக்கல்வி அலுவலர் (தற்போது வட்டார கல்வி அலுவலர்) பணியிடங்களில் ஒவ்வொரு ஆண்டும் காலியேற்படும் நிரந்தர பணியிடத்தில் 50% பணியிடத்தை நேரடியாக (by direct recruitment) ஆசிரியர் தேர்வு வாரியத்தின் மூலம் நிரப்பலாம் என அரசால் ஆணையிடப்பட்டுள்ளது.

2. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், 70 விழுக்காடு நடுநிலைப்பள்ளித் தலைமையாசிரியர் பதவியிலிருந்து பணிமாறுதல் மூலமாகவும், 30 விழுக்காடு ஆசிரியர் தேர்வு வாரியத்தால் நேரடி நியமனம் மூலமாகவும் நிரப்பப்படவேண்டும் என திருத்தம் வெளியிடப்பட்டது.

3. மேற்காணும் 30 விழுக்காடு வட்டாரக் கல்வி அலுவலர் பணியிடங்களை ஆசிரியர் தேர்வு வாரியத்தால், நேரடி நியமனம் மூலம் பாடவாரியாக நிரப்ப, மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் வெளியிடப்பட்டுள்ள பாடதிட்டம் பின்பற்றப்பட்டு தேர்வு செய்யப்பட்டனர்.

4. வட்டாரக் கல்வி அலுவலர் பணியிடம், நிர்வாகம் மற்றும் கல்வி ஆய்வு பணியிடமாக உள்ளதால், மாவட்ட கல்வி அலுவலர் (DEO) பணியிடங்களுக்கு பாடவாரியாக தேர்வாளர்களை தேர்வு செய்யும் முறை நீக்கம் செய்யப்பட்டு, மேலே ஐந்தாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் ஆணை வெளியிடப்பட்டுள்ள நிலையில், மாவட்டக் கல்வி அலுவலர் பணியிடங்களுக்கான நேரடி நியமனத்திற்கு பின்பற்றும் நடைமுறையினையே, வட்டாரக் கல்வி அலுவலர் பணியிடத்திற்கான நேரடி நியமனத்திற்கும் பின்பற்றுமாறும், இப்பணியிடத்திற்கு பாடசுழற்சி முறையினை பின்பற்றத் தேவையில்லை எனவும், அதன்படி வட்டாரக் கல்வி அலுவலர் பணியிடங்களுக்கான தேர்வாளர்களை தேர்வு செய்யுமாறு மேலே ஆறாவதாகப் படிக்கப்பட்ட அரசு கடிதத்தில் தொடக்கக்கல்வி இயக்குநருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

(த.பி.பா.)

5. மேலே நான்காவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், ஆசிரியர் தேர்வு வாரியத்தால், நேரடி நியமனம் மூலம் நியமிக்கப்படும் வட்டாரக் கல்வி அலுவலர் பணியிடங்களுக்கான போட்டித் தேர்விற்கு தேர்வின் கால அளவு மற்றும் மதிப்பெண்கள் நிர்ணயம் செய்யப்பட்டு ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

6. மேலே ஏழாவதாக படிக்கப்பட்ட கடிதத்தில், வட்டாரக் கல்வி அலுவலர் பணியிடங்களுக்கு தொடக்கப்பள்ளியில் பயிற்றுவிக்கப்படும் பாடங்களான தமிழ், ஆங்கிலம், கணிதம், இயற்பியல், வேதியியல், தாவரவியல், விலங்கியல், உயிரியல், வரலாறு மற்றும் புவியியல் ஆகிய பாடங்களில் மாநிலத்தில் உள்ள பல்கலைக் கழகம் ஒன்றினால் வழங்கப்பட்ட இளங்கலை பட்டம் அல்லது அதற்கு இணையான பட்டம் மற்றும் இம்மாநில பல்கலைக் கழகத்தால் வழங்கப்படும் பி.எட்., பட்டம் பெற்றவர்களிடமிருந்து விண்ணப்பம் பெறப்பட்டு தேர்வு செய்யப்பட உள்ளதால், மேற்குறிப்பிட்டுள்ள மதிப்பெண்கள் முறையில் 110 மதிப்பெண்களுக்கு மேற்குறிப்பிட்டுள்ள அனைத்து பாடங்களுக்கும் சேர்த்து பட்டதாரி தரத்தில் (Degree standard) ஒரு பொதுவான பாடத்திட்டமும் 10 மதிப்பெண்களுக்கான பொது அறிவு (General Knowledge) பாடத்திட்டமும் மற்றும் 30 மதிப்பெண்களுக்கான கல்வி வழிமுறைகள் (Educational Methodology) பாடத்திட்டமும் என்ற முறையில் மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் இயக்குநரால் தயார் செய்யப்பட்ட பாடத்திட்டத்திற்கு ஒப்புதல் அளிக்குமாறு தொடக்கக்கல்வி இயக்குநர் அரசைக் கோரியுள்ளார்.

7. மேலே உள்ள தொடக்கக்கல்வி இயக்குநரின் கருத்துருவினை அரசு கவனமுடன் ஆய்வு செய்து, அதனை ஏற்கலாமென முடிவு செய்து, தொடக்கப்பள்ளியில் பயிற்றுவிக்கப்படும் பாடங்களான தமிழ், ஆங்கிலம், கணிதம், இயற்பியல், வேதியியல், தாவரவியல், விலங்கியல், உயிரியல், வரலாறு மற்றும் புவியியல் ஆகிய அனைத்து பாடங்களுக்கும் சேர்த்து 110 மதிப்பெண்களுக்கு பட்டதாரி தரத்தில் (Degree standard) ஒரு பொதுவான பாடத்திட்டமும், 10 மதிப்பெண்களுக்கான பொது அறிவு (General Knowledge) பாடத்திட்டமும் மற்றும் 30 மதிப்பெண்களுக்கான கல்வி வழிமுறைகள் (Educational Methodology) பாடத்திட்டமும் (மொத்தம் 150 மதிப்பெண்கள்) என்ற முறையில் மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவன இயக்குநரால் தயார் செய்யப்பட்ட, இணைப்பில் உள்ள புதிய பாடத்திட்டத்தினை ஏற்று, ஆசிரியர் தேர்வு வாரியத்தால் நேரடி நியமனம் மூலம் வட்டாரக் கல்வி அலுவலர் பணியிடத்திற்கு போட்டித் தேர்வு நடத்துவதற்கு ஒப்புதல் அளிக்கலாம் எனவும், மேலும், மேலே நான்காவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் நிர்ணயிக்கப்பட்டவாறு, தேர்வின் கால அளவு 3 மணி நேரம் என்பதையும், தேர்ச்சி பெற குறைந்தபட்ச தகுதி மதிப்பெண் பொது (others) 50%, ஆதி திராவிடர் (SC) 45%, மற்றும் பழங்குடியினர் (ST) 40% என்பதை பின்பற்ற தொடக்கக்கல்வி இயக்குநருக்கு அறிவுறுத்தலாம் எனவும் முடிவு செய்து, அவ்வாறே அரசு ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

பிரதீப் யாதவ்,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
தொடக்கக்கல்வி இயக்குநர், சென்னை–6.
தலைவர்,
ஆசிரியர் தேர்வு வாரியம், சென்னை–6.
இயக்குநர்,
மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம்,
சென்னை–6.

(த.பி.பா.)

மேலாளர், அரசு மைய அச்சகம், சென்னை—1.
(அரசிதழில் வெளியிட வேண்டி)

நகல்:—
பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை,
சென்னை—9.
பள்ளிக் கல்வி(அநமு)த் துறை, சென்னை—9.
இருப்பு கோப்பு / உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.
19/2/19

இணைப்பு

(அரசாணை (நிலை) எண்.33, பள்ளிக் கல்வி(தொ.க.1(1))த் துறை, நாள் 19.02.2019)

# SYLLABUS FOR BLOCK DEVELOPMENT OFFICER'S EXAMINATION

**Total Marks: 150**

## PART – I

## Core Subjects - 110 marks

### Unit-I History of Tamil Literature

சங்க காலம் முதல் தற்காலம் வரை

சங்க இலக்கியம் – சங்கம் பற்றிய குறிப்புகள் – பாட்டும் தொகையும் தொகுப்பு முறை – சங்க இலக்கியச் சிறப்புகள்.

பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் – நீதி நூல்களின் சிறப்புகள் – ஐம்பெருங்காப்பியங்கள் – ஐஞ்சிறுகாப்பியங்கள் – பக்தி இலக்கியம் – தேவாரம் – நாலாயிரத்திவ்வியப்பிரபந்தம் – திருமந்திரம் – திருப்புகழ் – பட்டினத்தார் – அருணகிரிநாதர் – தாயுமானவர் – வள்ளலார் – கம்பராமாயணம் – மகாபாரதம் – பெரியபுராணம் – திருவிளையாடற்புராணம் – சிற்றிலக்கியங்கள் – 96 வகை பிரபந்தங்கள் – கோவை – பிள்ளைத்தமிழ் – கலம்பகம் – உலா – தூது – பரணி – பள்ளு – குறவஞ்சி முதலியன – சமயங்கள் வளர்த்த தமிழ் – சமணம் – பௌத்தம் – இசுலாம் – கிருத்துவம் – சித்தர்கள் – சமூகச்சீர்திருத்தம்.

தற்காலம் – தமிழ் உரைநடைவளர்ச்சி – புனைகதைகள் – நாவல் – சிறுகதைகள், நாட்டுப்புறவியல் – கட்டுரை – இலக்கியம்.

இலக்கணம் – எழுத்து – சொல் – பொருள் – யாப்பு, அணி இலக்கணம்.

### Unit-II History of English Literature

Development of Prose, Poetry, Fiction, Drama and Grammar

### Approaches to Literature( From 1830 to the Present day)

ModernDrama, Modern Fiction, Literary Movements, Literary Criticism and Theory, Teaching of English in India, Journalism and Creative Writing in English, British English Literature – American English Literature, Indian English Literature.

### English Language and Grammar

Origin of English Language, General, Characteristics of Old and Middle English. The rise and growth of Modern English, Growth of Vocabulary Greek, Latin, French, Italian, Scandinavian and other foreign influences – Word Formation, Change of Meaning, The makers of English - Spenser, Shakespeare, Milton and Dr. Johnson, Basic English Grammar - Parts of Speech, Tenses, Voice, Singular/ Plural, Spelling Reforms

(P.T.O.)

**Unit - III Mathematical Aptitude & Mental Ability Tests**

Data analysis - Conversion of Information to Data - presentation and interpretation of data -Tables, graphs, diagrams - Analytical interpretation of data - Simplification - Percentage - Highest Common Factor (HCF) - Lowest Common Multiple (LCM) - Ratio and Proportion - Simple interest - Compound interest - Area - Volume - Time and Work Decision making and problem solving - Logical Reasoning - Puzzles - Dice numerals, Verbals and non - verbals.

**Unit – IV General Science**

**Physics**: Units and Measurement, Laws of motions, Force, work, Energy and Power, Properties of Matter - Current electricity – Magnetism - Heat, Light and Sound - Atomic Physics - Electronic devices.

**Chemistry**: Classification of Matter, Stoichiometry, Types of Reactions, Extraction of Metals (Zn, Cu, Al, Au, Ag, Pb) ,Acids and Bases - Periodic classification, Chemical bonding, Compounds of Carbon, Nitrogen, Oxygen, and Sulphur. Gas laws, Drugs, Fertilizers, Dyes and Polymers.

**Botany**: Plant Physiology -Cell- Basic unit of Life. Photosynthesis - its Significance. Families - Malvaceae, Solanaceae, Euphorbiaceae, Musaceae and their economic importance. Plant Pathology - Bio technology - Tissue Culture.

**Zoology**: Human physiology- Human body functions, Environmental Biology - Global Warming - Green house effect, Ozone layer depletion, Applied biology - Genetics and Evolution -Dairy, Poultry, Pisciculture, Fish farming - Health and hygiene.

**Unit – V IV History - National Movements of Tamil Nadu and India and Constitutional Development**

South Indian history - Culture and Heritage of Tamil people - Advent of European invasion - Expansion and consolidation of British rule - Effect of British rule on socio-economic factor - Social reforms and religious movements - India since Independence.

Characteristics of Indian culture - Unity in diversity – race, colour, language, custom – India - as secular state - Organizations for finearts, dance, drama, music - Growth of rationalism.

Advent of Europeans - Early uprising against British rule - 1857 Revolt - Indian National Congress - Emergence of national leaders - Gandhi, Nehru, Tagore, Netaji - Growth of militant movements - Communalism led to partition - Role of Tamil Nadu in freedom struggle - Rajaji, VOC, Periyar, Bharathiar & Others - Birth of political parties /political system in India since Independence —, Dravidian movement in TN - Political parties and populist schemes - Prominent personalities in the various spheres – Arts, Science, literature and Philosophy.

Constitution of India - Preamble to the constitution - Salient features of constitution - Union, State and territory - Fundamental rights - Fundamental duties - Human rights charter - Union legislature – Parliament - State executive - State

(P.T.O.)

Legislature – assembly - Status of Jammu &Kashmir - Local government – panchayat raj – Tamil Nadu - Judiciary in India – Rule of law/Due process of law - Indian federalism – central – state relations - Emergency provisions - Elections - Election Commission Union and State - Amendments to constitution - Schedules to constitution - Administrative reforms & tribunals - Corruption in public life – Anti - corruption measures – Central Vigilance Commission, lok-adalats, Ombudsman, Comptroller and Auditor General of India - Right to information - Central and State Commission - Empowerment of women.

**Unit-VI - Physical Geography and Economic Commercial Geography of India**

Universe - Solar system - Earth and Atmosphere, hydrosphere, lithosphere - Monsoon, rainfall, weather and climate - Water resources .Geography of India - Physical features: Soil, minerals and natural resources-Natural vegetation-Forest &Wildlife-Agricultural pattern, livestock and fisheries-Social geography population-density and distribution-Natural calamities-disaster management. Geographical landmarks - Policy on environment and ecology. Geography of Tamil Nadu.

Nature of Indian economy – Five year plan models - an assessment - Land reforms &agriculture - Application of science in agriculture - Industrial growth - Role of public sector &disinvestment - Development of infrastructure - National income Rural welfare oriented programmes - Social sector problems – population, education, health, employment, poverty - HRD – sustainable economic growth - Economic trends in Tamil Nadu - Energy Different sources and development - Finance Commission - Planning Commission - National Development Council. Current socio-economic problems New economic policy and Government sector. Niti Aayog-Globalization, Liberalization, Privatization and Marketing.

**Unit- VII General Knowledge and Current Affairs – 10 Marks**

Latest diary of events – National-National symbols-Profile of States-Eminent persons & paces in news-Sports & games-Books & authors – Awards & honors-Latest historical events - India and its neighbours - Science and Technology - Latest inventions on science & technology Latest discoveries in Health Science - Mass media and communication.

## PART – II

**CHILD PSYCHOLOGY AND PEDAGOGY – 30 Marks**

**Unit -I Human Growth and Development**

Interaction of Nature and Nurture Concept, Distinction among Growth, Development and Maturation. General Principles of Growth and Development – Characteristics, Dimensions of Development – Physical, Cognitive, Emotional, Social and Moral – Phases of Development and Development tasks – Infancy, Childhood and Adolescence.

**Unit-II Cognitive Development**

Cognitive Process, Attention – Factors relating to attention, Kinds of attention – Inattention, distraction and division of attention – Span of Attention. Sensation and Perception – Factors relating to Perception, Perceptual errors – Concept formation

(P.T.O.)

– Nature and Types of Concepts – Piaget's stages of cognitive development – Bruner's theory – Concept maps – Imagery – Language and Thinking – Reasoning and Problem Solving – Implications to the teacher.

**Unit-III Social, Emotional and Moral Development**

Social development – Factors of Social development – Social Maturity – Erikson's stages of Social development – Emotional development – meaning – Positive and Negative emotions – Emotional control and maturity – Place of emotions in life – Significance of Emotional Intelligence – Moral development – Kohlberg's stages of Moral development.

**Unit-IV Learning**

Nature and importance of learning – Individual differences in learning – Learning Curves – Factors influencing learning – theories of learning – Conditioning: Classical and Operant (Pavlov, Skinner), Trial and Error (Thorndike), Learning by Insight (Kohler) – Transfer of Learning – Learning by Imitation – Levels of Learning: Gagne – Remembering and Forgetting: Curve of forgetting.

**Unit- V Intelligence and Creativity**

Nature of Intelligence – Distribution of Intelligence – Theories of Intelligence: Single, Two factor and Multifactor theories, Guilford's structure of the Intellect, Gardner's Multiple Intelligence Theory – Constancy of IQ – Assessment of Intelligence – Users of Intelligence tests.

The Process of Creativity - Creativity and Intelligence – Identification and promotion of Creativity – Thinking: Convergent and Divergent thinking.

**Unit- VI Motivation and Group Dynamics**

Motivation and Learning –Kinds of Motives – Theories of Motivation: Maslow's hierarchy of needs – Role of Rewards and Punishments – Level of Aspiration – Achievement Motivation: Techniques of Developing Achievement Motivation – Motivation in the classroom context, Competition and Co-operation – Leadership Traits – Leadership Styles and Classroom Climate.

**Unit- VII Personality and Assessment**

Meaning and Definitions of Personality – Major Determinants of Personality – Theories of Personality – Types and Traits of Personality, Psychoanalytic – Assessment of Personality: Projective and Non projective Techniques–Aptitude – concept, types and measurement. Attitude and interest – concept and measurement – Integrated Personality.

**Unit-VIII Mental Health and Hygiene**

Concept of Mental health and Hygiene – Conflict and Frustration –Unrest – Adjustment and Maladjustment – Causes of Maladjustment – Defence Mechanisms – Mental Illness. Juvenile Delinquency - Promotion of Mental health of students and teachers.

(P.T.O.)

**Unit-IX Guidance and Counselling**

Nature, Types and Need of Guidance and Counselling – Educational, Vocational and Personal. Identification of Children with Counselling Needs – Counselling Techniques: Individual and Group Techniques–Guidance and counselling for the children with Learning Difficulties.

**Unit- X History of Educational Development in Tamil Nadu**

Ancient, Medieval, Modern Educational System, Development and growth of modern education system(since 1813 to the present day) - Organisational structures of Educational System in Tamil Nadu (DSE, DEE, Samagra Shiksha Abhiyan, SCERT , Non- Formal, etc.,) Roles and Responsibilities of CEOs, DEOs, BEOs, Acts and Rules – RTE( Right of children to free and compulsory Education act), Schools run by other Departments in Tamil Nadu - Kallar Reclamation, Forest Department, Adhi Dravida and Tribal Welfare Department and other Departments, Implementation of Educational schemes in Tamil Nadu.

*****

PRADEEP YADAV,
Principal Secretary to Government.

//Forwarded / By order//

S. Manjumol
Section Officer.
19/2/19